# திருமறை நேசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 8 MARCH இதழ் - 3




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. அந்திரேயா 1
2. பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு 9
3. உங்கள் திறமைகளை பயன்படுத்துங்கள் 14
4. கிறிஸ்துவுடைய சபை இன்று எங்கே இருக்கிறது? 16
5. ஆலோசனையாக 21
6. கள்ளப் போதகர் 22
7. யெகோவா சாட்சி (2) 27
8. ஒரு தூய்மையான புதிய தொடக்கம் 30

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 MARCH Issue-3


**ஆசிரியவுரை**

## "அந்திரேயா"

பரலோகத்தின் தேவனுக்குப் பயந்து, நீதிக்குத் தலைவணங்கி, வசனத்திற்கு நடுங்கி, சத்தியத்தில் உறுதிகாட்டி, சோதனைகளை வென்று, பாடுகளைச் சகித்து, வெற்றி வாழ்க்கை வாழ்ந்து, வாடாத ஜீவகிரீடத்திற்குத் தங்களை சொந்தமாக்கிக் கொண்ட பல தேவதாசர்கள் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளனர். ஆனால் இவர்களெல்லாரைப் பற்றியும், ஏனோ வேதாகமம் விவரமாக விளக்கவில்லை. குறைவானவர்களுடைய வாழ்க்கை மட்டுமே ஓரளவு முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தைக் கற்போர் மற்றும் பின்பற்றுவோர் மத்தியில், அவர்கள் பிரபலமடைந்துவிட்டனர். ஆபிரகாம், யோசேப்பு, மோசே, யோசுவா, தாவீது, பேதுரு, பவுல் போன்றோர் இப்பட்டியலின் கீழ் தவறாமல் வருவர்.

ஆனால், தேவையான அளவுக்குக் கூட அறிமுகமாகாத சில தேவ மனிதர்களும், வேதாகமத்தில் இருக்கவே செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர், தங்கள் காலத்தில் வாழ்ந்த அந்தப் பிரபலங்களின் செல்வாக்கினால் தங்கள் முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றனர். இவ்வரிசைக்குப் போட்டிபோடவும் பலர் உண்டு. யோசுவாவின் காலத்தில், தேவனை உத்தமமாய்ப் பின்பற்றின 'காலேப்' (எண். 14.24) தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனாக இருந்து, இஸ்ரவேலருக்கு அந்நாட்களில் சிம்மசொப்பனமாக விளங்கின பெலிஸ்தரை தனி ஒருவனாக எதிர்த்து நின்று வெற்றி கண்ட 'சம்மா' (2 சாமு. 23 :12), ஓரே பிரசங்கத்தில் 3000 பேரை இரட்சித்த பேதுருவை கிறிஸ்துவண்டையில் அழைத்து வந்த 'அந்திரேயா' (யோவான் 1 : 42), மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டு சபைகளை ஸ்தாபித்த

அப்போஸ்தலன் பவுலின் ஊழிய நாட்களில் அவனுக்குத் துணையாக இருந்து உதவி புரிந்த 'தீகிக்கு' (எபே. 6:21) போன்றவர்கள் இவர்களில் சிலர்.

சரி, இப்பொழுது நம்முடைய இரண்டாம் பட்டியலில் வரும் அந்திரேயாவைப் பற்றிக் கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம். நம்மில் பெரும்பாலானவர்கள் நினைப்பதைப்போல் இவன் ஒரு சாமானியன் அல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவை அறிந்து கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சிறந்த பக்தன் தான் 'அந்திரேயா'.

மத்தேயு, மாற்கு லூக்கா போன்ற நற்செய்தி நூல்களில் இவனைப் பற்றி அதிகம் காணோம். ஆனால், இவனோடு தனக்கிருந்த தனிப்பட்ட நெருக்கத்தின் காரணமாக, இவரைப் பற்றியதான சில தகவல்களை சுருக்கமாக, அதே சமயம் தெள்ளத் தெளிவாகக் கொடுக்கிறார் யோவான். (யோவான் 1 : 35. 42) முதலில் யோவான் ஸ்நானகனுடைய சீஷனாக இருந்து பிறகு இயேசுக்கிறிஸ்துவின் சீஷனாக மாறியுள்ளான் இவன்.

வேதாகமம் அல்லாத பிற சரித்திரம் இவரைப்பற்றி சில பிரயோஜனமான தகவல்களை, நமக்குக் கொடுக்கிறது. இரட்சகரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, உலகின் பல பகுதிகளுக்குச் சென்று நற்செய்தி அறிவித்தவர்களில் இவனும் ஒருவன். இவனுடைய வைராக்கியமான பிரசங்கத்தால் கவரப்பட்ட அகாயா நாட்டு தேசாதிபதியின் மனைவி, கிறிஸ்தவத்தின் மீது நம்பிக்கை வைத்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் வந்தாள். அதை அறிந்த தேசாதிபதி இவனைக் காவலில் வைத்து, உபத்திரவங்களுக்கு உட்படுத்தி, இறுதியாக சிலுவையிலறைந்து கொல்ல உத்தரவிடுகிறான். அப்படிச் சிலுவையிலறையப்பட்ட நிலையிலும் நற்செய்தியை அறிவித்துக் கொண்டே உயிரை விட்டானாம்.

35) முதலில் யோவான் தரும் வசனப்பகுதியை படிப்போம். (யோவான் 1 : 35 - 42) மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டு பேரும் நிற்கும்போது

36) இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு : "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்றான்.

37) அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள்.

38) இயேசு திரும்பி, அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு : என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள் ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

39) அவர் : வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத் தினம்

அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.

40) யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின் சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன்.

41) அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு : மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான் ; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.

42) பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான். இயேசு அவனைப் பார்த்து : நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.

இப்பொழுது, இந்த வசனங்களின் அடிப்படையில் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## I. "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்றவுடன் பின் சென்றான். (வ. 36, 37)

ஒரு நாளில், யோவான் ஸ்நாகனும், அவனுடைய சீஷரில் இரண்டு பேரும் நின்றுகொண்டுள்ளனர். அச்சமயத்தில், நமதாண்டவர் அவ்வழியே நடந்து சென்றார். அதைக் கண்ணுற்ற யோவான் ஸ்நானகன் "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்றான். அதைக் கேட்ட அவ்விரண்டு சீஷரும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.

"இவர் தான் தேவ ஆட்டுக்குட்டி" என்று அடையாளம் காட்டப்பட்டவுடன் அதாவது உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்ப்பவர் இவர்தான் என்று அறிவிக்கப்பட்டவுடன், அந்த ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்ற எந்தத் தயக்கத்தையும் காட்டவில்லை. உடனடியாக அவருக்குப் பின் சென்றான்.

இங்கே ஒன்றைக் கவனிப்பது மிகவும் அவசியம். அந்திரேயா இதுகாறும் பின்பற்றிவந்தவர் சாதாரணமானவர் அல்ல. தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாக வந்தவர். (ஏசா. 40:3). எதிர்ப்பைக் கண்டும், எதிரிகளைக் கண்டும் அஞ்சாதவர். மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது' என்று தைரியமாகப் பிரசங்கித்து, அநேகருக்கு ஞானஸ்நாங் கொடுத்து ஒரு புரட்சிக்கு வித்திட்டவர். வெகுஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அவருடைய பிறப்பு விசேஷமானது. ஆம், "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை . . . " என்று, இவனுடைய பிறப்பைக் குறித்து இயேசுக்கிறிஸ்துவே சாட்சி

கொடுக்கிறார். (மத். 11:11). இன்னும் அவருடைய உணவு வித்தியாசமானது, உடை வித்தியாசமானது (மாற். 1:6). அவருடைய வாசஸ்தலம் வித்தியாசமானது. இப்படிப் பலவகைகளிலும் தனித்தவராயிருந்த யோவனுக்கு உகந்த சீஷனாக இருந்தவன் தான் அந்திரேயா. உண்மையில் யோவான் ஸ்நானகனுடைய சீஷன் என்பதில் அவனுக்குத் திருப்தியும், பெருமையும் இருந்தது.

ஆனால், அவரைக்காட்டிலும் மேலானவர் அடையாளம் காட்டப்பட்டபொழுது, தேவனிடத்திலிருந்து வந்தவர் இவர்தான் என்று சுட்டிக்காட்டப்பட்ட பொழுது சிறப்புமிக்க யோவானை விட்டுவிடத் தயங்கவுமில்லை, தாமதிக்கவுமில்லை.

இன்றைக்கு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று, தவறாக நினைத்துக் கொண்டு, மனிதனால் உருவாக்கப்பட்ட பல கொள்கைகளைப் பின்பற்றும் பிரிவுக் கூட்டத்தார்களிடையே இவ்வருங்குணம் இருந்திருக்குமானால், மெய்கிறிஸ்தவம் என்றே ஒரு உன்னத நிலையை எட்டிப்பிடித்திருக்கும். ஆனால், இன்றைய யதார்த்த நிலை என்ன? பரிசுத்த ஆவியானவர் மூலம் கொடுக்கப்பட்ட தூய சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், பழம்பெருமை களையும், பாரம்பரியங்களையும் வாய்கூசாமல் பேசிக்கொண்டிருக் கிறோம். தங்களுடைய சபையைத் தோற்றுவித்தவரைப் பற்றிய பெருமை, அம்மனிதருடைய வாழ்க்கையைப் பற்றிய பெருமை சபையின் கட்டிடத்தைப் பற்றிய பெருமை, கூடும் மக்களுடைய செல்வாக்கைப் பற்றிய பெருமை, தங்களுடைய வரம்பெற்ற பிரசங்கிகளைப் பற்றிய பெருமை, அவர்கள் தாங்கள் தேவனோடு பேசுகிறோம் என்று துணிந்து கூறும் பொய்யைப் பற்றிய பெருமை என்று இன்னும் பலவற்றைப் பற்றிப் பேசி நாட்களை விரயமாக்கிக் கொண்டுள்ளோம். ஐயோ, இன்னும் எத்தனை நாளைக்கு, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீண் ஆராதனை செய்து" (மத். 15 : 9) வேதாகமத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ள சபை ஒன்று தான். (எபே. 4 : 4) இயேசுக்கிறிஸ்து 'ஒரு சபையைக்' கட்டுவதாகத் தான் வாக்குக் கொடுத்தார். "சபைகள்" என்று வசனத்தில் இல்லை. (மத். 16 : 18) அந்த ஒரு சபைக்காகத்தான் தன் உயிரைக் கொடுத்தார். (அப். 20 : 28) அந்த ஒரு சபையைத் தான், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு கட்டினார். (அப். 2:47). மணவாட்டியாகிய அந்த ஒரு சபையை எடுத்துக்கொள்ளத்தான் மணவாளனாகிய இயேசுக்கிறிஸ்து மீண்டும் வர இருக்கிறார். (எபே. 5 : 27). வேதாகமத்தில் சபையைப் பற்றிச் சொல்லப்படுகின்ற எல்லா இடங்களிலும், "ஒருமை" தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்வது முக்கியம்.

வேதாகமம், சபையைப் பற்றி இப்படிச் சொல்கிறது என்றுசொன்னால் ஆ அப்படியா என்று ஆர்வத்துடன் கேட்டு, பெரேயா பட்டணத்து மக்களைப் போல், தினந்தோறும்

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, வசனங்களுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தி, பரலோகத்தின் தேவனைப் பிரியப்படுத்துவதற்குப் பதில் பல சால்ஜாப்புகளைக் கூறுகிறோம்.

"பரிசேயர்கள் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக தேவ ஆலோசனையைப் புறக்கணித்ததைப் போல் "(லூக். 7 : 30). அநேகராகிய நாம் இன்றைக்குப் புறக்கணித்துக் கொண்டுள்ளோம். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும்." (எபி. 10 : 31) என்ற உண்மை இன்னுமா நமக்கு விளங்கவில்லை? போதும், நம்முடைய ஆவிக்குரிய ஒழுங்கீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

அந்திரேயா, தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுக்கிறிஸ்துவைப் **பின்பற்றினதைப் போல்,** அந்த தேவ ஆட்டுக்குட்டியானவர் மூலம் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசத்தை நாமும் எவ்விதத் தயக்கமின்றி, தாமதமுமின்றி **பின்பற்றுவோம்.**

## II. என்ன தேடுகிறீர்கள் ? - எங்கே தங்கியிருக்கிறீர்?

அந்திரேயாவும், வேறொரு சீஷனும் தம்மைப் பின்பற்றி வருவதைக் கண்ட இயேசு, திரும்பிப் பார்த்து, "என்ன தேடுகிறீர்கள்" என்றார். ஏதாவது கிடைக்குமென்று தேடுகிறீர்களா என்பதே அதன் பொருள். இயேசு வாழ்ந்த நாட்களில், அவரைப் பின்பற்றினவர்களில் கணிசமான பகுதியினர் அவரிடமிருந்து கிடைக்கும் சரீர நன்மைகளுக்காகவே பின்பற்றினர். இவ்விருவரும் அவர்களைப் போலத் தானோ என்று நினைத்தே இக்கேள்வி கேட்கப்பட்டது. இக்கேள்வியினால் கொஞ்சம் அதிர்ந்துபோன அந்திரேயாவும், மற்றொரு சீஷனும், இயேசுவின் கேள்வியையே திசை திருப்பிவிடுகின்றனர்.

ஆம், என்ன தேடுகிறீர்கள்? என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல், "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று எதிர்க்கேள்வி எழுப்புகின்றனர். அதன் நோக்கம், இயேசு ஐயரே, போதகரே, சரீர நன்மைகளுக்காக நாங்கள் உம்மைத் தேடவில்லை. எங்களை நீர் அப்படி எடைபோட வேண்டாம். மாறாக தேவ ஆட்டுக்குட்டியாகிய உம்மோடுகூடத் தங்கியிருக்கும்படியாக, உம்முடைய போதகத்தைக் கேட்கும்படியாக வருகிறோம் என்றார்கள்.

கிறிஸ்தவர்களே, இயேசுவின் போதனைகளை ஏற்று அவர் பின்னால் அணிவகுத்துச் செல்கிறோம் என்று மார்தட்டுகிறவர்களே! இயேசுவைக் குறித்துப் பிரசங்கிக்கிறோம் என்று வேதாகமத்தைக் கையிலெடுத்து ஊரை வலம்வரும் போதகர்களே! நம்முடைய நிலை என்ன? என்ன நோக்கத்திற்காக நாம் இப்பூமியில் கிறிஸ்தவர்களாய் உள்ளோம்? எதற்காக அவருடைய போதனைகளை ஏற்று, அவர் பின்னால் செல்லுகிறோம்? நாம் பிரசங்கிப்பதன்

உள் அர்த்தம் தான் என்ன? சிந்திப்போம். ஒருவேளை சரீர நன்மைகள் மேலோங்கி நிற்குமானால், உலக ஆசை உயர்ந்து காணப்படுமானால், உடனடியாக நம்முடைய நிலையை மறுபரிசீலனை செய்வது அவசியம். நாம் பயப்படும்படியான ஒரு எச்சரிப்பை, அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது கொடுக்கிறார். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் நாம் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். (1 கொரி. 15 : 19).

அந்திரேயா, ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள கிறிஸ்துவின் பின்னால் சென்றதைப் போல், நாமும் ஆவிக்குரிய காரியங்களுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் பின் செல்வோம்.

## III. மேசியாவைக் கண்டோம் : (வ. 41)

இயேசுவோடு தங்கியிருக்கும் வாய்ப்பைப் பெற்றபின், அவருடைய போதனைகளையும், அவருடைய தன்மைகளையும், அவருடைய தெய்வீகத்தையும் அறிந்து கொண்டபின் அவன் முதலாவது செய்த வேலை, தன் சகோதரனைக் கண்டு, "மேசியாவைக் கண்டோம்" என்பது தான். அவரைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கலாம். ஆனால் இரண்டே வார்த்தைகளில் முடித்துக் கொள்கிறார். ஒருவேளை, அந்திரேயா அடைந்த பேரானந்தத்தால் அதிக வார்த்தைகள் பேச முடியாமற் போயிருக்கலாம். அல்லது நிறையப் பேசும் ஞானம் இல்லாமலிருந்திருக்கலாம் அல்லது அதிகமாகப் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பாமல், தான் சந்தித்தவர் இன்னார் என்று மாத்திரம் எடுத்துரைக்க முற்பட்டிருக்கலாம் அல்லது தான் அவரை அறிமுகப்படுத்தும் விதம் அலாதியானதாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கலாம். எப்படியோ, இறுதியில் "மேசியாவைக் கண்டோம்" என்று தன் சகோதரனுக்குச் சொல்கிறார்.

இதைவிட சிறப்பாக வேறு யாராலும் அறிமுகப்படுத்தியிருக்க முடியாதென்றே எண்ணுகிறேன். ஏனெனில், மேசியாவின் வருகைக்காக யூதர்கள் ஆவலோடு காத்திருந்த காலகட்டம் அது. அது மாத்திரமல்ல வந்தவர் மேசியா தானா என்று குழம்பியிருந்த நேரம். அந்தச் சூழ்நிலையில் தான், இரத்தினச் சுருக்கமாக, பளிச்சென "மேசியாவைக் கண்டோம்" என்கிறார். "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25 : 11) என்று ஞானி சாலமோன் சொல்வது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது பாருங்கள்.

கிறிஸ்துவை மற்றவர்களுக்குச் சொல்கிற விஷயத்தில் அந்திரேயா ஒரு மிகச் சிறந்த முன்னோடியாய் இருக்கிறார். ஒருவேளை நமக்குப் பேசும் ஞானம் இல்லாமலிருக்கலாம். பேச

விரும்புவதை எப்படிச் சொல்வதென்று தெரியாமலிருக்கலாம். இனிமேல் நமக்குத் தயக்கம் தேவையில்லை. கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சபையைப் பற்றியும் மற்றவர்களுக்குச் சொல்ல பெரிய பிரசங்கங்கள் அவசியமில்லை. நமக்குத் தெரிந்த அளவில், கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும் அளவில் ஒரு சில வார்த்தைகள் பேசினாலே போதும். இயேசுவைக் குறித்துப் பேச வேண்டுமென்பது ஒவ்வொரு கிறிஸ்தவன் மீதும் விழுந்த கடமை. (Iகொரி 9:16)

உலகெங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்ற கட்டளையைப் பெற்றுள்ள நாம், குறைந்தபட்சம், அந்திரேயா போல் நம் குடும்பத்திலுள்ளவர்களுக்கும், நம்முடைய பேச்சை செவிமடுத்துக் கேட்போருக்கும் நற்செய்தியை அறிவிப்போம்.

## IV. பேதுருவை இயேசுவிடம் கூட்டிக்கொண்டு வந்தான் (வ. 42)

தான் கண்ட மேசியாவைக் குறித்து தன் சகோதரனிடம் அறிவித்ததோடல்லாமல், அவனை இயேசுவிடம் கூட்டிக் கொண்டும் வந்தான். கிறிஸ்து வண்டைக்கு ஒருவனை அழைத்து வருவதென்பது ஒரு சாதாரண வேலையல்ல. சொல்லப்போனால் இதுவரை அந்திரேயா செய்த எல்லாவற்றைக் காட்டிலும், இதைச் சிறந்தது என்று கூறலாம்.

ஏன், பேதுருவை, அந்திரேயா கையோடு அழைத்து வந்தார் என்பதற்கான காரணத்தை நாம் பின்னாளில் புரிந்து கொள்ள முடியும். ஆம், அந்திரேயாவைக் காட்டிலும், பேதுரு வாய்த்துடுக்குள்ளவராகவும், சொல்லாற்றல்மிக்கவராகவும், விஷயங்களை உடனடியாகப் புரிந்து கொள்ளும் சமயோசிதம் நிறைந்தவராகவும், தலைமைப் பண்புள்ளவராகவும் இருந்துள்ளான். இப்படி, சகல விஷயத்திலும், தன்னைவிடத் திறமைசாலியாக இருந்த பேதுருவை, இயேசுவுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்ற பேரார்வம் அவனுக்குள் இருந்தது. ஆர்வம் மாத்திரமல்ல, இயேசுவினிடம் கொண்டுபோய் விட்டால், அவர் மீதியைப் பார்த்துக்கொள்வார் என்ற ஆழமான நம்பிக்கையும் இருந்தது.

தகுதியானவர்களைக் கிறிஸ்துவினிடம் அறிமுகப்படுத்தும் அந்திரேயாவின் அருங்குணம், பேதுருவோடு முடிந்துவிடவில்லை. யோவான் 6ம் அதிகாரத்தில் 5000 பேரைப் போஷித்த சம்பவத்தைப் பார்க்கிறோம். அங்கே, இயேசு தன்னுடைய சீஷர்களைச் சோதிக்கும்படி, "கூடியிருக்கும் திரளான ஜனங்களுக்கு ஆகாரம் எங்கே கிடைக்குமென்று பிலிப்புவிடம் கேட்கிறார்". இவ்வளவு பேருக்கு, 200 பணத்துக்கு அப்பங்கள் வாங்கினாலும்

போதாதே என எண்ணி, மலைத்து நிற்கும்போது, "இதே அந்திரேயா தான்" ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன் துண்டுகளையும் வைத்திருந்த சிறுவனை இயேசுவிடம் அறிமுகம் செய்கிறார். அப்பொழுது, அங்கே நடந்த அற்புதம் நாமனைவரும் அறிந்ததே (யோவான் 6 : 1 - 14).

வேறொரு சந்தர்ப்பத்தில், சில கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்து "இயேசுவைக் காணவேண்டும்" என்ற தங்கள் விருப்பதனை வெளிப்படுத்தினர். கிரேக்கர்களை கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வது நியாயமா என்று யோசித்துத் தயங்கி, விஷயத்தை அந்திரேயாவிடம் சொல்கிறார். அந்திரேயாவோ விரைந்து செயல்பட்டு, உடனடியாக அவர்களை இயேசுவிடம் அழைத்துச் சென்றான். பிலிப்பும் உடன்சென்றார். (யோவான் 12 : 21, 22). மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் அறிமுகம் செய்வதில் அந்திரேயாவுக்கு நிகர் அந்திரேயாவே!

எனதருமை வாசகரே! அந்திரேயாவோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்போமா? குறைகள் இருந்தால் களைந்துபோட்டு, இன்றுமுதல் ஏன், இப்பொழுது முதல், நாம் ஒவ்வொருவரும், அந்திரேயாவாகச் செயல்படுவோம். ஆம், அந்திரேயா போல், தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் பின்னால் உடனடியாகச் செல்வோம். அழிந்து போகும் சரீர நன்மைக்காக அல்ல, ஆத்தும நன்மைக்காக அவர் பின்னே செல்வோம். இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி நமக்குத் தெரிந்த அளவில் மற்றவர்களுக்கு அவரைப் பற்றிச் சொல்வோம். சொல்வதோடு மாத்திரமல்ல, பிரயாசை எடுத்து அவர்களை கிறிஸ்து வண்டை கொண்டு வருவோம்.

நாம் ஒவ்வொருவரும், ஒரு அந்திரேயாவாக செயல்பட முடிவெடுத்து செயலில் இறங்கினால், நமது தேசத்தை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்க முடியும். முடிவெடுப்போம்! செயல்படுவோம்!! வெற்றி பெறுவோம்!!!

**EZS. ராஜநாயகம்.**

## நமக்குப் பாவமில்லை என்போமானால்...?

***"நமக்குப் பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது." (1யோவான் 1: 8)***

## தீர்வு என்ன?

***"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1: 9)***

# பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு

பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றிய தொடரில், ஆறாவது கட்டுரையாக இம்மாதம் நாம் எடுத்துக் கொண்ட பாடம் பரிசுத்தி ஆவியானவரின் திருமுழுக்கு பற்றியதாகும்.

ஒருவேளை, வேதாகமத்தில் காணும் எந்த பொருள் பற்றி கூறப்பட்டிருப்பதையும் விட, பரிசுத்த் ஆவியானவரின் திருமுழுக்கு பற்றியும் அதைப் பெற்றுக் கொண்டவர்கள் செய்யக் கூடியவற்றைப் பற்றியும் மிக அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. பெந்தெ கொஸ்தே குழுக்கள் ஆவியானவரின் அற்புத அடையாளங்களைப் பற்றி உரத்த குரலில் கூறிவருகின்றனர். ஆனால் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் : அவர்களுக்குள்ளேயே பிரிவுகள், வேதாகமத்தில் காணப்படாத சபைகளில் அங்கம் வகிப்பது, சபைகளுக்கு மனிதர்களுடைய பெயர்களைத் தரித்துக் கொள்ளுவது, இன்னும் முரண்பாடாக போதிப்பது ஆகிய அனைத்தும் அவர்களிடம் உண்டு. நிச்சயமாக, ஆவியானவர் இவ்வாறாகச் செய்ய அவர்களை வழி நடத்த மாட்டார். எனவேதான், ஆவியானவரின் உண்மையான பணி என்ன என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முந்தைய பாடங்களில் நாம் பார்த்தது போல, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பாக, தேற்றர வாளனை அப்போஸ்தலர்களுக்கு அனுப்புவதாக அவர் வாக்களித்திருந்தார். நினைவிருக்கட்டும், இது சகலருக்கும் பொதுவாக அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் அல்ல. ஆனால் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட வாக்கு. பின்னர், கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப்பின், தமது பரலோக பிதாவினிடத்திற்கு அவர் திரும்புவதற்கு சிறிது முன்னர், மேலிருந்து வல்லமை வருமளவும், தமது அப்போஸ்தலர்களை எருசலமிலே காத்திருக்கச் சொன்னார். (லூக்கா 24:49; அப் 1:8) அவர்களும் அவ்வாறே செய்தனர். தொடர்ந்து நாம் படிக்கிறோம் : "பெந்தெ கொஸ்தே என்னும் நாள் வந்த போது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப். 2:1-4)

இப்போது, பரிசுத்த, ஆவியானவரால் நிரம்பப் பெற்ற இம்மனிதர்கள் யார்? யாருக்கு கர்த்தர் தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை வாக்களித்தார்? எருசலேமை விட்டுப் போகாமல், பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்க கர்த்தர் கூறியது யாரிடம்? இவை அனைத்துக்கும் பதில் : அப்போஸ்தலர்கள் என்பதே. அப்படியானால், பிறமொழிகளில் பேசவும், அற்புதங்களைச் செய்யவும் வல்லமை பெற்றவர்கள் யார்? மீண்டும், அது அப்போஸ்தலர்களையே சுட்டிக் காட்டுகிறது. (அப். 2:4; 2:43)

அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப் பட்டது; பின்னர் யோவேல் தீர்க்க தரிசி, யோவேல் 2:28ம் வசனத்தில் முன்னுரைத்த படி, ஆவி அவர்களுக்கு பொழியப்பட்டது; அப்போஸ்தலர் நடபடி 2:16, 17-ம் வசனங்களில் லூக்கா காண்பிப்பது போல எருசலேமில் அன்றைய தினத்தில் அது நிறைவேறியது - இவை அனைத்தும், கிறிஸ்து அளிக்கும் வல்லமை பெற்றிருந்ததாக யோவான் ஸ்நானகன் கூறிய பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு ஆகும். (மத். 3:11)

திருமுழுக்கு என்ற வார்த்தைக்கு அடக்கம், முழுக்குதல், ஒரு வெற்றிச் செயல் எனப் பொருள். திருமுழுக்கு என்பது தண்ணீரும், பிற காரியங்களும் சம்பந்தப்பட்டதாக அது இருக்கலாம். எனவே, பெந்தெ கோஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் எருசலேமில் கூடி வந்த நேரத்தில், “பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று” (அப். 2:2) என வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. வேறு விதமாகக் கூறினால், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் முழுக்கப்பட்டனர் அல்லது அடக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டதற்கு அத்தாட்சியாக அவர்கள் அந்நிய மொழிகளில் பேச ஆரம்பித்தனர். (அப். 2:3,4) இந்த மொழிகள் புரியக் கூடியவைகளாக இருந்தன. ஏனெனில் அவைகளைக் கேட்டவர்கள், அவரவர் மொழிகளில் கேட்பதாக ஆச்சரியப்பட்டுக் கூறினார்கள். (அப். 2:6)

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் திருமுழுக்குப் பெற்றதின் விளைவாக பலர் ஆசீர்வதிக்கப்பட்டனர். ஏனெனில், புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்படாததால், தரப்படாத நிலையில் இருந்தது. எனவே சத்தியத்தைப் போதிக்க, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியான வரால் வழி நடத்தப்பட்டு, இறுதியாக எழுதப்பட்ட வார்த்தை கொடுக்கப்பட்டது.

சுவிசேஷத்தில் காணப்படும் மற்றும் ஒரே ஒரு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கொர்நேலியும் அவன் வீட்டாரும் சம்பந்தப்பட்டது. இந்தக் குடும்பம் புறஜாதியாரை பிரதிநிதித்துவப்படுத்தியது. அப்போஸ்தலர்கள் யூதர்கள் அவர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். கர்த்தர் பாரபட்சமற்றவர்

என்பதை நிரூபித்துக்காட்ட புறஜாதியாரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர்.

அப்போஸ்தலர் நடபடி 10, 11 அதிகாரங்களில் இந்தக் குடும்பத்தைப் பற்றி படிக்கிறோம். வசனம் கூறுவதைப் பாருங்கள் : "இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன் : உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்." (அப். 10: 1-6) இது நடந்த பின்னர், கர்த்தர் தாம் பாரபட்சமற்றவர் என்பதைக் குறித்து சில பாடங்களை பேதுருவுக்குக் கற்றுத்தர, பேதுருவும் மற்றோரும் கொர் நேலியுவின் வீட்டுக்கு வந்தார்கள். பின்னர், வசனம் கூறுகிறது : "அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ள வரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சசயமாய் அறிந்திருக்கிறேன்." (அப். 10:34,35) பேதுரு தொடர்ந்து போதிக்கிறான். பின்னர் நாம் படிக்கிறோம் : "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்த சேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு : நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்" (அப். 10 : 44 - 48)

அப்போஸ்தலர் நடபடி 11-ம் அதிகாரத்தில், கொர்நேலியும் அவன் வீட்டாரும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த போது, செசரியாவில்

என்ன நடந்தது என்பதை எருசலேமில் பேதுரு சொல்லுகிறான். அதாவது, "நான் பேசத் தொடங்கிய போது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்ட பொழுது அமர்ந்திருந்து அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்." (அப் 11:15-18)

பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில், அதாவது எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளிலே, எவ்வாறு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றர்களோ அவ்வாறே கொர்நேலியும் அவன் வீட்டாரும் இப்போது பெற்றார்கள், என்பதை பேதுரு இங்கு தெளிவாகக் காட்டுகிறார். இது தனிப்பட்டது (பிரத்யேகமானது), எல்லாரும் பெற்றுக் கொண்டது அல்ல என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு பற்றிய மற்றொரு உதாரணத்திற்கு, பேதுருவும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்ற அந்தக் காலத்திற்கு பேதுரு செல்ல வேண்டியதாயிற்று; ஏனெனில் இடைக்காலத்தில் வேறு எவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை.

பிற எல்லா கிறிஸ்தவர்கள் நிலை என்ன? அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனரா? இல்லை, அவர்கள் பெறவில்லை எல்லா கிறிஸ்தவர்களும் அப்போது அதைப் பெற்றிருந்தால். அப்போஸ்தலர்களும், கொர்நேலியும் அவன் வீட்டாரும் பெற்றதைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசும் பெரிய காரியமாக அது இருந்திருக்குமா?

ஆனால், "நிச்சயமாக இன்று சில கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பார்கள்" என சிலர் சொல்லக்கூடும். இல்லை, ஒருவர் கூட கிடையாது. ஒருவரும் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறுவதில்லை அதன் பயன் என்னவாக இருக்கும்? நம்மை வழிநடத்த, எழுதப்பட்ட வசனம் உள்ளது. அதிலுள்ள உபேதசத்தின்படி கீழ்ப்படிந்து நடந்தால், கர்த்தர் வாக்களித்தப்படி நம்மை இரட்சித்து ஆசீர்வதிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக உரிமை கொண்டாடுவோர் நன்றாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

## தபசு காலமும் ஈஸ்டர் பண்டிகையும்

கிறிஸ்து மரித்தார் உயிர்த்தார் என வேதாகமம் போதிக்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்ப்பையும் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நினைவு கூர்ந்தார்கள். (அப். 20 : 7)

புதிய ஏற்பாட்டில் ஈஸ்டர் பற்றி ஒரு வசனத்தைக் கூடப் பார்க்க முடியாது. தேவன் அங்கீகரிக்காத மனித பாரம்பரியங்கள் பலவற்றில் தபசு காலமும் ஈஸ்டரும் அடங்கும்.

மனிதனுடைய கட்டளைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என இயேசு கூறுகிறார். (மத். 15 : 9)

எனவே, தேவன் கட்டளையிடாதவைகளை நாம் கடைப்பிடிப்பது குற்றமாகும்.

## பெண்கள் பகுதி

# உங்கள் திறமைகளை பயன்படுத்துங்கள்

மத்தேயு 25-ம் அதிகாரத்தில், புறத்தேசத்திற்கு பிரயாணமாகப் போகிற ஒரு மனிதன், தனது ஊழியக்காரர்களிடம் பணத்தை ஒப்படைத்ததைப் பற்றிய ஒரு உவமையை இயேசு கூறினார் : ஊழியக்காரர்களின் திறமைக் கேற்ப அவனவனுக்குப் பணத் தை பட்டுவாடா செய்கிறான். ஒருவனுக்கு ஐந்து தாலந்து தரப்பட்டது. அவன் அப்பணத் தை வியாபாரத்தில் முதலீடு செய்து அதிகமாக ஐந்து தாலந் தை சம்பாதித்தான். மற்றொரு ஊழியக்காரனுக்கு இரண்டு தாலந்து கொடுக்கப்பட்டது. அவனும் அப்பணத்தை ஞான மாக முதலீடு செய்து, இன்னும் இரண்டு தாலந்தை சம்பாதித் தான். மூன்றாமவனுக்கு ஒரே ஒரு தாலந்து கிடைத்தது. அதை அவன் முதலீடும் செய்ய வில்லை; வட்டிக்கும் கொடுக்க வில்லை. மாறாக, தன் எஜமான் திரும்பி வரும் வரை அதை பூமியில் புதைத்து வைத்தான். அவர்களுடைய எஜமான் திரும்பி வந்த பின் முதல் இரண்டு ஊழியக்காரர்கள் பேரிலும் மகிழ்ச்சியடைந்தான். மூன்றாவது ஊழியக்காரன் பேரிலோ கோபம் கொண்டான். ஞானமாக தாலந்தை உபயோ கிக்கத் தவறிய மூன்றாவது ஊழியக்காரனிடமிருந்து அது பிடுங்கப்பட்டு, முதல் ஊழியக் காரனுக்குக் கொடுக்கப்பட்டது. பிரயோஜனமற்ற ஊழியக் காரனை புறம்பாக இருளிலே தள்ளிப் போட்டான் என்று கதை முடிகிறது.

தேவன் நமக்களித்துள்ள திறமைகளை (தாலந்து) நாம் உபயோகிக்காவிடில் என்ன நடக்கும் என்பதை நமக்கு எடுத்துக்காட்டவே இயேசு இக்கதையைக் கூறினார். நமது திறமைகளை நாம் மறைத்தால், அல்லது பயன்படுத்தத் தவறி னால், தேவன் அவற்றை நம்மிட மிருந்து எடுத்துப் போடுவார். "அவளைப் போல நான் திறமை யுள்ளவள் அல்ல, எனவே இந்த வேலையை செய்யட்டும்" என நாம் கூறலாகாது. தேவன் ஒவ்வொருவருக்கும் ஒரு சில திறமைகளை அளித்திருக்கிறார். ஒவ்வொருவரும் அவருக்கு முக்கியமானவரே நாம் செய்யக் கூடியதற்கு மிஞ்சி நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறதில்லை. தனது திறமைக்கேற்றவாறு ஒவ்வொரு பெண்ணும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தால், கர்த்தர் அவள் பேரில் பிரியமாக இருப்பார். மேற்சொன்ன உவமையில், 5 தாலந்து பெற்றுக் கொண்ட முதல் ஊழியக்காரன் பேரில் அவனு டைய எஜமான் எவ்வளவு பிரியமாக இருந்தானோ, அதே போன்று தான் 2 தாலந்து பெற்ற இரண்டாவது ஊழியன்

பேரிலும் பிரியமாக இருந்தான். ஏனெனில், இரண்டாவது ஊழியனும் தனக்குத் தரப்பட்ட இரண்டு தாலந்தையும் ஞானமாகப் பயன்படுத்தினான்.

நமது திறமைகளை ஞானமாக நாம் பயன்படுத்தும் போது, இன்னும் அதிகமான அளவில் திறமைகளை கர்த்தர் நமக்கு அளிப்பார் என்பதையும் கவனியுங்கள். "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்", என இயேசு கூறினார். (மத். 25:29)

**B.B. சோட் R.R. நாயகம்**

## கவலைப்படாதீர்கள். . .

*"உங்கள் ஜீவனுக்காகக் கவலைப்படாதிருங்கள்..."(மத். 6:25-34)*

### ஏனெனில்

1. *உணவைப் பார்க்கிலும் உங்கள் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் உங்கள் சரீரமும் மேலானவைகள்.*

   (வ. 25)

2. *தேவனால் பிழைப்பூட்டப்படும் பறவைகளை விட நாம் மிகவும் விசேஷித்தவர்கள் அல்லவா?*

   (வ. 26)

3. *கவலைப்படுவதால் வாழ்வை நீடிக்க இயலுமா?*

   (வ. 27)

4. *காட்டுப் புல்லை உடுத்துவிக்கும் தேவன், நமக்கு அதிகமாக செய்ய மாட்டாரா?*

   (வ. 28-30)

5. *"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்."*

   (வ. 33)

6. *ஏனெனில், நாளையதினம், தன்னுடைவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.*

   (வ. 34)

# கிறிஸ்துவுடைய சபை இன்று எங்கே இருக்கிறது?

"...... என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்ளுவதில்லை" - (மத்தேயு 16:18)

அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வி இது. வித்தியாசமான பல சபைகள் இன்று இருப்பதாலும், அவை யாவுமே இயேசு கட்டுவதாக வாக்களித்த சபை அதுவே எனக் கூறிக் கொள்ளுவதாலும், உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கேட்பவர் மிகவும் குழப்பத்திற்குள்ளாகின்றார். என்றாலும், இயேசு தமது சபையைக் கட்டினார்; புதிய ஏற்பாட்டில் அவருடைய அப்போஸ்தலர்களின் எழுத்துக்கள் இவ்வுண்மைக்கு சாட்சி பகருகின்றன. அத்துடன், "பாதாளத்தின் (மரணத்தின்) வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (அல்லது அழிப்பதில்லை)" என இயேசு வாக்களித்தார். இயேசு மீண்டும் வருவதாகவும் வாக்களித்தார். (மத். 16:27) அவ்வேளையில், "கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும்" எதிர்பார்க்கிறார். (எபே. 5:27) எனவே இவற்றிலிருந்து கிறிஸ்துவின் சபை இன்று இருக்கிறது எனவும், முதல் நூற்றாண்டில் அவர் ஏற்படுத்திய காலம் தொடங்கி எப்போதுமே அவருடைய சபை இருந்து வந்துள்ளது என்றும், அவர் மீண்டும் வரும் வரை அவருடைய சபை நீடித்திருக்கும் என்றும் நாம் முடிவு செய்யலாம்.

## கிறிஸ்துவுடைய சபை இங்கே இருக்கிறது?

இயேசுவின் நிபந்தனைகளின்படி, அவரால் இரட்சிக்கப்பட்டுள்ள மக்கள் கூட்டம் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் "சபை" என்று குறிப்பிடப்படுகிறது. தமது இரட்சிப்பின் நிபந்தனைகளை உலக முழுவதும் அறிவிக்க இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு அதிகாரமளித்தார். (மத். 28:18-20) அவர்களும், முதல் முதலில் தங்களுக்கு செவி சாய்த்த மக்களைப் பார்த்து, "... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என போதித்து அவர் கூறியபடி செய்து கீழ்ப்படிந்தார்கள். (அப். 2:38) இந்த வாக்குத் தத்தமானது "நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப். 2:39) முதலில் கேட்ட அந்த மக்களுக்கு "உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என அறிவுருத்தப்பட்டது.

(அப். 2:40) "வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 2:41) அதன் பின்னர், "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்" என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. (அப். 2:47) இரட்சிக்கப்பட்ட மக்களின் அந்த முதல் கூட்டம் "எருசேலமிலுள்ள சபை" என அறியப்பட்டது. (அப். 8:1)

அப்போஸ்தலர்களும் ஆதிவிசுவாசிகளும் எங்கெல்லாம் சென்றனரோ அங்கெல்லாம் இதே இரட்சிப்பின் செய்தியை அறிவித்தனர்; அவர்களுக்கு செவி சாய்த்த மக்களும் அதே வழியைப் பின்பற்ற அழைக்கப்பட்டு, அவ்வாறு ஏற்றுக் கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டு, ஏற்கனவே அவர்களுக்கு முன்னதாக இரட்சிக்கப்பட்டவர்களோடு கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நிச்சயமாக, இரட்சிக்கப்பட்ட எல்லா மக்களும் எருசலேம் சபையில் அங்கம் பெற இயலாது. எனவே, எங்கெல்லாம் இரட்சிக்கப்பட்டவர்கள் வசித்து வந்தனரோ அங்கெல்லாம் அவர்கள் பிராந்திய சபைகளாகக் கூடி வந்தனர்.

இரட்சிப்பி நிபந்தனைகளையும் அவருடைய சபையில் சேர்ப்பதையும் இயேசு மாற்றிக்கொள்ளாத படியால், அதே செய்தியை இன்று கேட்டு, அதே காரணத்திற்காக, அதே மாதிரி ஒருவர் இன்று கீழ்ப்படிந்தால் கர்த்தர் தமது சபையில் அவரையும் சேர்த்துக் கொள்ளுகிறார்.

## பிராந்திய சபையாகக் கூடி வருவது

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் இயேசுவின் சபையில் அங்கத்தினராக இருப்பதால், அந்த உறுப்பினர்கள் அனைவரும் அவருடைய சபையின் பிரதிநிதிகளாக வசதியான இடங்களில் கூடி வருதல் அவசியமாகும். உதாரணமாக, கொரிந்து பட்டணத்தில் இரட்சிக்கப்பட்ட மக்கள் "சபையில் கூடி வந்து" கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் காலத்தைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்டார். (1 கொரி 11:18) ரோமாபுரியில் இரட்சிக்கப்பட்டவர் களுக்கும் அவர் எழுதி, பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா ஆகிய கிறிஸ்துவில் அவருடைய உடன் ஊழியர்களுக்கும் "அவர்களுடைய வீட்டிலே கூடிவரும் சபைக்கும்" வாழ்த்துக்கள் அனுப்பினார். (ரோமர் 16:3-5)

எருசேலம் சபையிலுள்ள முதல் உறுப்பினர்கள், "....அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42) அப்போஸ்தலர்கள் அந்தச் சபையின் அங்கத்தினர்களாக இருந்தபடியால், அக்காலம் தொடங்கி பிற பிராந்திய சபைகளுக்கு அப்போஸ்தலர்களால் அங்கீகரிக்கப்பட்ட

ஒரு முன்னோடியான உதாரணமாக அச்சபை விளங்கிற்று. எனவே இரட்சிக்கப்பட்ட மக்கள் ஒரு வீட்டில் அல்லது ஒரு வசதியான இடத்தில் "ஒரு சபையாகக் கூடி வந்து", "அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் கேட்கும் போது" (வேதாகமப் பாடங்கள் - 1 தீமோ 4:13); "ஐக்கியமாக வரும்போது" (உற்சாகப்படுத்துதல் - எபி. 10:24-25); "அப்பம் பிட்கும் போது" (கர்த்தரின் பந்தி - 1 கொரி 11:23); "ஜெபம் பண்ணும் போது" (வாழ்த்துக்களும், விண்ணப்பங் களும் கொலோ. 3:16-17), புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவின் சபை எவற்றைச் செய்ததோ, அதே காரியங்களைத்தான் இவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். தம்மைப் பின் பற்றுவோருக்கு இயேசு விட்டுச் சென்ற ஆராதனை முறை மிகவும் எளிமையான ஒன்று. நாம் "**எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது**". (1 கொரி 4:6)

## முற்றிலும் பரிசுத்தமான ஒரு பிராந்திய சபை இருக்கிறதா?

ஒரு பிராந்திய சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் பாவமற்றவர்களாகவும், தேவனுடைய விருப்பத்தை நன்றாகப் புரிந்தவர்களாகவும், ஆவிக்குரிய விதத்தில் வளர்ந்து பூரணமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்று கூறினால், அப்படிப் பட்ட ஒரு சபையும் இதுவரை இருந்ததில்லை என்றும், இன்றும் அப்படிப்பட்ட ஒரு சபை இல்லை என்பதே பதிலாகும். எருசலேமில் உள்ள முதல் சபையிலே கூட பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பொய் சொன்ன அங்கத்தினர்கள் இருந்தனர். (அப். 5:1-11) இன்னும் சிலர் அன்றாட உணவு விநியோகத்தில் கை வைப்பவர்களாகக் காணப்பட்டனர். (அப். 6:1) புறஜாதியிலிருந்து மனந்திரும்பியவர்கள் இரட்சிக்கப்பட்ட மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கடைபிடிக்க வேண்டுமென தவறாக எண்ணிய அங்கத்தினர்கள் சிலரும் காணப்பட்டனர். (அப். 15:1-5) ஒவ்வொரு இடத்திலுள்ள இயேசுவின் ஒவ்வொரு சபையும், தீவிரமாக போதிக்கப்பட்டிருந்தாலும் (அப். 5:42), கர்த்தருடைய உபதேசத்தை புரிந்து கொள்ளுவதிலும், நடைமுறையில் செயல்படுத்துவதிலும் வெவ்வேறுஅளவில் வளர்ச்சியடைந்த உறுப்பினர்களைக் கொண்டதாகவே அச்சபை இருக்கும். (1 கொரி.3:1-3) வெவ்வேறு இடங்களிலுமுள்ள பிராந்திய சபைகளுக்கு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் அனைத்தும், "உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்," முற்றிலும் பயனுள்ளவைகளாக இருப்பதுடன், (2 தீமோ. 3:17), "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சை யாயிருக்க "அங்கத்தினர்களைத் தூண்டுகின்றன. (1 பேதுரு 2:3)

## உண்மையான சபை எங்கே இருக்கிறது?

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும், "விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியும்" தனிப் பொறுப்பு உள்ளது. (2 கொரி 13:5) இயேசுவுக்கு உன்னையே தாழ்த்தி, உண்மையான மனந்திரும்புதலின் மூலமாக கீழ்ப்படிந்து, பாவங்கள் நீங்கிட திருமுழுக்குப் பெற்று, இயேசுவில் உன்னுடைய விசுவாசம் உண்மையானது என நிரூபித்திருக்கிறாயா? நீ அவ்வாறு செய்திருந்தால், நீ இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையில் இருக்கிறாய்; ஏனெனில் தேவன் அவ்வாறு கூறியிருக்கிறார்; அவர் பொய் சொல்லுவதுமில்லை, மாறுவதும் இல்லை. (தீத்து 1:2; யாக் 1:17-18)

இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை மட்டும் போதித்து, அதையே கடைபிடிக்கும் இரட்சிக்கப்பட்ட மற்றவர்களுடன், ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட மனிதனும் ஐக்கியமாக செயல்பட வேண்டும். (2 யோ. 9-11) மாறுபாடானவைகளை உபதேசித்து அதை கடைபிடிக்கும் மற்றவர்களோடு உறவு கொள்ளாமல் விலகி இருக்க வேண்டும். (ரோமர் 16:17-18)

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் அங்கத்தினர்கள்.... "ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும்" கூட்டுப் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றனர். (1 கொரி 1:10) சந்தேகமின்றி இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக் கொண்டு. அதோடு ஒத்துப் போவது என்று இதற்கு அர்த்தம். (எபே. 4:14-15)

அப்போஸ்தலர் பவுல் "ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சபையிலும்" (1 கொரி 4:17) ஒரே காரியத்தைப் போதித்து வந்ததை கொரிந்து பட்டணத்து ஆதி சபைக்கு அவர் நினைப்பூட்டியது போல, இன்றும் இயேசுவின் சபைகள் அனைத்தும் ஒரே காரியங்களைப் போதிப்பதிலும் கடைபிடிப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். தாங்கள் முதலில் பெற்றுக்கொண்ட அப்போஸ்தல உபதேசத்திலிருந்து விலகிப் போன கலாத்திய சபைகளை பவுல் கண்டித்தார். (கலா 1:6) இயேசுவின் உபதேசத்திலிருந்து விலகிப் போகும் எந்த சபையும் ஆபத்தை நோக்கிச் செல்லுகிறது. (வெளி 2,3 அதிகாரங்கள்) எனவே, "போதிக்கப்பட்டவைகள் உண்மையா என்று வேதவாக்கியங்களோடு சோதித்துப் பார்க்க" வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உண்டு. (அப். 17:11) சாத்தான் ஒய்வாக இருப்பதில்லை (1 பேதுரு5:8) கவனமற்றிருப்பவர்களையும், அலட்சியப்படுத்துவோரையும் தொடர்ந்து ஏமாற்றி, இயேசுவின் சபைத் திட்டங்களிலிருந்து அவர்களை விலகிப் போகச் செய்கிறான். (2 கொரி 11:3-4; 13-15)

## சத்திய சபையை அடையாளங் காண கற்றுக் கொள்வீர்

இயேசுவின் புதிய ஏற்பாட்டு திட்டத்திலிருந்து மாறுபட்ட பல சபைகள் இன்று இருப்பதே, உண்மையான சபைக்கு மாற்றாக பலவற்றை சாத்தான் வேகமாக உருவாக்கியுள்ளான் என்பதற்கு சான்றாகும். சத்திய சபை ஒன்று இல்லாதிருந்தால், சத்தியத்தின் தூதர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம், சாத்தானுக்கும் அவனுடைய ஊழியர்களுக்கும் இல்லாதிருந்திருக்கும். "கள்ளத் தீர்க்கதரிசிகளின் பால் கவனமாக இருக்க" இயேசு தம்மைப் பின்பற்றியவர்களை எச்சரித்தார். (மத். 7:15) அத்துடன், அவருடைய நாமத்தினாலே பொய்யான தீர்க்க தரிசனங்களை உரைத்து அற்புதங்கள் பல செய்த அநேகரை, ஒதுக்கித் தள்ளும் நியாயத் தீர்ப்பு நாள் காட்சியை முன்னுரைத்தார். (மத். 7:21-23) கள்ள தீர்க்க தரிசிகள் நிறைந்துள்ள இக்காலத்தில், சில உண்மையான தீர்க்கதரிசிகளும் உள்ளனர் என்பதை நாம் நிச்சயப்படுத்தக்கூடும் அவர்களுடைய உபதேசத்திலும் நடத்தை யிலிருந்து அவர்களை அடையாளங் காணலாம். ஆனாலும் "நன்மையிலிருந்து தீமையை வித்தியாசப்படுத்தி அறிந்து கொள்ள" தேவனுடைய வார்த்தையை நன்கு கற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் சொந்தப் பொறுப்பாகும். (எபி. 5:13-14) ஆகவே, உண்மையான சபைக்கும் தவறானவைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை இவ்வாறகாகக் கடைபிடியுங்கள்.

"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்த படியினாலே, உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 28:26-28) என எபேசு சபை மூப்பர்களை அப்போஸ்தலர் பவுல் நினைப்பூட்டியது போல, இயேசுவுக்கு உண்மையான சபை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. எந்த சபையில் நாம் ஐக்கியமாக இருப்பினும் அதில் வித்தியாசம் எதுவுமில்லை என நாம் எண்ணினால், இயேசுவுக்கு நாம் அவமரியாதை செய்கிறோம். அவருடைய சபைக்காக அவர் தமது இரத்தத்தை சிந்தினார். அவருடைய சபைக்குள் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி, நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதைப் பற்றி நாம் நிச்சயமாக இருக்க வேண்டும்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**

# - ஆலோசனையாக -

1. இன்றைக்கு உங்களால் எளிதில் செய்து முடிக்ககூடிய வேலையை நாளைக்கு என்று தள்ளிப் போடாதீர்கள்.

2. உங்களாலேயே செய்து முடிக்கக் கூடிய சில காரியங்களுக்காக அனாவசியமாக இன்னொருவருடைய உதவியையும் ஒத்தாசையையும் நாடாதீர்கள்.

3. பணம் உங்களது கையிற்கு வருமுன் அதை (கற்பனையில்) செலவழிக்கத் திட்டமிடாதிருங்கள்.

4. உங்களுக்கு நிச்சயமாகத் தற்சமயம் உபயோகமில்லாத ஒரு பொருளை அது மலிவாகக் கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக வாங்காதீர்கள்.

5. முழுமனதோடும் ஆர்வத்தோடும் செய்யப்படும் எந்த வேலையும் பாரமாகவோ கஷ்டமாகவோ தெரியாது.

6. வெற்றியை நோக்கிச் செல்லும் எந்தச் சாலையிலும் பழுதுபார்க்கும் பணி எப்பொழுதும் நடந்து கொண்டேதான் இருக்கும்.

7. வெற்றியை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழத்தைப் போல் உங்களுக்கு யாரும் கொடுக்கமாட்டார்கள். வேர்வையைத் தண்ணீராக ஊற்றி உழைப்பு என்ற ஏரைப் பொறுமையோடு பிடித்து உழுபவர்களுக்குத்தான் அந்த வெற்றி கிடைக்கும்.

8. ஒரு தவறு மறுக்கப்படும்போது அது இரட்டிப்பாகிறது. அது ஏற்றுக்கொள்ளப்படும்போது மன்னிக்கப்பட்டு, மறக்கப் படுகிறது.

9. யாருடைய வார்த்தையையும் ஏன் ஒரு மூடனுடைய வார்த்தையைக்கூட உதாசீனம் செய்யாமல் மதிக்கப் பழகுங்கள். நின்றுபோன கடிகாரம் கூட ஒரு நாளைக்கு இரண்டு முறை சரியான நேரத்தைக் காட்ட முடியும்.

10. நாம் விரும்புவதைச் செய்வதில் அல்ல, நாம் செய்வதை விரும்புவதில்தான் உண்மையான மகிழ்ச்சி உண்டு.

11. துக்கம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளப்படும் போது, பாதியாகி விடுகிறது. ஆனால் பகிர்ந்து கொள்ளப்படும் மகிழ்ச்சியோ இரட்டிப்பாகிறது.

**தெரிந்தெடுக்கப்பட்டது.**

# கள்ளப் போதகர்

முதலாவதாக, கள்ளப்போதனை என்றால் என்ன? கிறிஸ்துவின் உபதேசத்திற்கும், சுவிசேஷத்திற்கும் மாறுபாடான எந்தப் போதனையும் கள்ளப் போதனையே. ஒவ்வொரு கள்ளப் போதனைக்கும் பின்னால், ஒரு கள்ளப் போதகரும் இருப்பார். வேறு விதமாகச் சொன்னால், அவர்கள் உண்மையற்றவைகளைப் போதிக்கின்றனர். "**கள்ளத் தீர்க்கத்தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்**; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்," (மத்தேயு 7:15) என கிறிஸ்து எச்சரித்தார்.

இரண்டாவதாக, தவறான காரியங்களை ஒருவர் ஏன் போதிக்க வேண்டும்? பலர் வேண்டுமென்றோ அல்லது அறிந்தோ அவ்வாறு செய்வதில்லை. அதாவது, அவர்களே ஏமாற்றப்பட்டு, பின்னர் முற்றிலும் நல்லெண்ணத்துடன் அதைப் பிறருக்கும் போதித்து வருகின்றனர். கிறிஸ்து கூறினார் : "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' மத். 7:21-23) இப்போது, இங்கு கூறப்பட்டவர்கள் யாராக இருந்தனர்? நிச்சயமாக, மதத் தலைவர்கள் தான். நேர்மையாகவும், அறியாம்லும் தான் அவர்கள் தவறு செய்திருக்கின்றனர். அவர்கள், அவரைச் சார்ந்தவர்கள் அல்ல என்று நியாயத் தீர்ப்பின் போது அவர்களை தள்ளி விடுவதாக கர்த்தர் கூறினார். ஆனால், அதற்கு முன்னால் எத்தனை பேரை அவர்கள் ஏமாற்றப் போகின்றனர்! அவர்களிடம் ஏமாறியவர்கள், மீண்டும் எத்தனை பேரை ஏமாற்றுவார்கள்? அவ்வாறே அது தொடர்ந்து போய்க் கொண்டிருக்குமே!

மூன்றாவதாக, இன்றைய நாட்களில் போதிக்கப்பட்டுவரும் சில கள்ளப் போதகங்கள் யாவை? நிறைய இருந்த போதிலும், மிகவும் பிரசித்த பெற்ற சிலவற்றை மட்டும் பார்ப்போம். உதாரணமாக **திருமுழுக்குப் பெறாமல் ஒருவர் இரட்சிப்பு அடையக்கூடும் என்பது**. உண்மைதான், திருமுழுக்கு மட்டுமே இரட்சிக்காது.

ஆனால் ஒருவர் திருமுழுக்குப பெற்றிருக்க வேண்டும் என சுவிசேஷம் திட்டவட்டமாகக் கூறுகிறது. "விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு வான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்," (மாற்கு 16:16) என கிறிஸ்து கூறினார். எருசலே மிலே, விசுவாசிகளின் ஒரு கூட்டத்திலே பேதுரு பேசும் போது, மனந்திரும்பி, பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (அப்.2:38) மேலுமாக, கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் வர ஒருவர் திருமுழுக்குப் பெற் றிருக்க வேண்டும். என சுவிசேஷம் உபதேசிக்கிறது. (கலா 3:26,27; 1 கொரி. 12:13) ஒருவர் திருமுழுக்குப் பெறாமல் இரட்சிப்படைய முடியும் என்று கூறுவது போல இது உங்களுக்கு ஒலிக்கிறதா?

ஆனால், சபை ஒன்றும் அவ்வளவு முக்கிய மல்ல. இந்த சபை, அல்லது அந்த சபை அல்லது எந்த சபையி லேயும் இருக்கலாம்; எல்லாம் ஒன்று தான் என்ற அடுத்த கள்ளப் போதகத்தைக் கேட்கி றோம். பிரிவினை சபைகளைப் பொ றுத்த வரையில் இது சரியாக இருக்கலாம்; ஆனால் சரீரமாகிய சபைக்கு கிறிஸ்துவே இரட்ச கராக இருக்கிறார் (எபே. 5:23) ஒரே சரீரம், அல்லது சபை உண்டென்று நாம் படிக்கிறோம் (எபே. 4:4), கிறிஸ்து அதற்காக மரித்தார் (எபே 5:25), தமது இரத்தத்தை சிந்தி அதைக் கிரையங் கொண்டார். (அப்20:28) சபை முக்கியமல்ல வென்றால், இவை அனைத்தும் உண்மையாக இருக்குமா?

அடுத்த கள்ளப் போதகம், பரலோகத்திற்குச் செல்ல பல வழிகள் உண்டு, என்பது. பல வழிகளில் நாம் சென்றாலும், இறுதியில் அடைய முயல்வது ஒரே இடத்தை தான் என அவர்கள் கூறுகின்றனர். ஆனால், கிறிஸ்துவே பரலோகத் திற்கு வழி (யோவான் 14:6) என்று தான் நான் படிக்கிறேன். மேலும் அது ஒரு குறுகிய வழி என்றும், (மத். 7:13,14), வேறு வழி மூலமாக செல்ல முயன் றால் அவன் ஒரு திருடனாகப் பாவிக்கப்படுவான் (யோவான் 10:1)

அடுத்த கள்ள போதகம் என்னவென்றால், கிறிஸ்து ஒருநாள் வந்து, எருசேலமிலே நியாயவான்களை 1000 ஆண்டுகள் அரசாளுவார். ஆனால் இது உண்மை அல்ல. கிறிஸ்து இப்பூமியில் கால் ஊன்றப் போவதாக எந்த ஒரு சுவிசேஷ வசனமும் வேதாக மத்தில் இல்லை. முன்பு அவர் இங்கு இருந்தபோது ஒதுக்கப் பட்டு, சிலுவையில் அறையப் பட்டாரே? மீண்டும் இப்பூமிக்கு ஏன் வரவேண்டும்? கிறிஸ்து வரும் போது ஒரு திருடனைப் போல, அல்லது பலர் எதிர் பாராத வேளையில், மேகத் தினூடே அவர் தோன்றுவார்; நியாயவான்கள் அவரை மேகத்தில் சந்திப்பர்; ஆகாய விரிவும் பூமியும் அழிக்கப்படும்; நியாயந் தீர்க்கப்படும்; கெட்ட வர்கள் நித்திய ஆக்கினைக்குத்

தள்ளப்பட்டு, நல்லவர்கள் தேவனோடு நித்தியத்திற்கும் வாழச் செல்வர். இவை அனைத்தையும் நாம் யோவான் 14:1-3; 1 தெச. 4:13-18; 2 பேதுரு 3:10-13; மத்தேயு 25:46 ஆகிய வசனங்களில் படிக் கலாம்.

நான்காவதாக, கள்ளப் போதகர்களைப் பற்றியும் அவர்களுடைய போதகங் களைப் பற்றியும் வேறு சில எச்சரிக்கைகள் யாவை? பவுல் கூறினார் : "சகோதரரே, நீங்க ளெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில் லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திச் சொல்லுகிறேன்." (1 கொரி :10) ரோமருக்கு எழுதும் போது, பவுல் கூறினார் : "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல் களையும் உண்டாக்குகிறவர் களைக் குறித்து எச்சரிக்கை யாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்." (ரோமர் 16:17,18)

ஐந்தாவதாக, ஒருவன் உண்மையைப் பேசுவதையும், பொய் பேசுவதையும் நாம் அறிந்து கொள்ளுவது எப்படி? யோவான் கூறினார் : "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்" (1 யோவான் 4:1) ஒரு போதகர் எதையாவது போதித்துக் கொண்டு வரும்போது நாம் அவரை சோதிக்க வேண்டும் என யோவான் கூறுகிறார். நாம் அதை எப்படிச் செய்ய முடியும்? தேவனுடைய வசனத்தோடு அவர்கள் கூறுவதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இப்போது, சுவிசேஷத்திலிருந்து அது மாறுபட்டிருந்தால், தவறு யாரிடம் உள்ளது எனக் கூறுங்கள் பார்ப்போம்? அது நிச்சயமாக கர்த்தருடைய வசனம் அல்ல. உண்மையான நற்செய்தியை கலாத்தியருக்கு தான் போதித்திருந்ததாக பவுல் கூறினார். அவரோ அல்லது வானத்திலிருந்து வந்த தூதனோ வேறொரு சுவிசேஷத்தைப் போதித்தால் கர்த்தரின் சாபம் அவன் மேலே வரும் என்றும் அவர் கூறினார் (கலா 1:6-9) எனது நண்பர்களே! பவுல் போதித்ததற்கு மாறான சுவிசேஷத்தைப் போதித்து வரும் பல போதகர்கள் இன்று இருக்கிறார்கள். நாம் யாருக்கு செவி சாய்ப்போம்? மனிதனுக்கா? கர்த்தருக்கா? ஆனால், அது என்ன வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது? இரட்சிக்கப்படுவதற்கும், வீழ்ந்து போவதற்கும் உள்ள வித்தியாசத்தை அது உண்டாக்குகிறது. மனிதனுடைய

போதனையைக் கடைபிடித்துக் கொண்டு பரலோகத்திற்குள் செல்ல எதிர்பார்க்கலாகாது.

தொடர்ந்து, யோவான் எழுதினார் : "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 9-11) வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19 வசனங்களில் நாம் படிக்கிறோம் : "இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது : ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்த தீர்க்க தரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்." கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாக ஒரு மனிதன் ஏதாவது போதித்தால் அல்லது வசனத்தோடு எதையாவது சேர்த்தால் அல்லது எடுத்துப் போட்டால், அவர் ஒரு கள்ளப் போதகர், அதாவது நம்மை அழித்துப் போடக்கூடிய வற்றை போதிப்பவர் ஆவார்.

எனவே, மத சம்பந்தமான காரியங்களில் நீங்கள் ஏமாறாமலிருக்க நீங்கள் ஒரு வேதாகமம் அல்லது புதிய ஏற்பாட்டு புத்தகத்தை வாங்குங்கள். அதைக் கவனமாகப் படியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள். பின்னர் கர்த்தர் விரும்பும் அறிவைப் பெற்று, யாராவது தவறானவற்றைப் போதித்தால், நீங்கள் அதைக் கண்டு பிடிக்க முடியும். எனவே, கள்ளப் போதகங்களை அடையாளம் கண்டு தள்ளிவிட முடியும்.

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; தேவனுடைய வசனம் சத்தியம் (யோ. 17:17) அது மட்டுமே உங்களை இரட்சிக்கும்; பரலோகத்திற்கு இட்டுச் செல்லும். (யோ. 8:32; யோ14:6)

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? சுவிசேஷத்தில் நாம் படிக்கக் கூடிய சபையில் ஒரு உறுப்பினரா? இல்லையென்றால், நீங்கள் கிறிஸ்தவராக ஆவன செய்ய உங்களை வேண்டுகிறோம். மனிதன் உண்டாக்கிய சபைகளோ, பெயர்களோ உங்களை இரட்சித்து பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சத்தியத்தை அறிந்து சத்தியத்திற்குக் கீழ்ப்படிருந்தால் மட்டுமே கர்த்தர் உங்களை இரட்சித்து, தமது சபையில் சேர்த்துக் கொள்வார். (அப். 2)

J.C. CHOATE J.C. சோட்

# திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை திங்களிதழ் விதிப்படிவம் IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கேயம் - 638 701. |
| அச்சிடுவோரம் பெயரும் முகவரியும் | : | **ஜீவசக்தி பிரஸ்**<br>148-B, கிருஷ்ணம் பாளையம்,<br>ஈரோடு - 638 003. |
| வெளியிடுவோர் பெயர் | : | **கிறிஸ்துவின் சபை,**<br>காங்கயம். |
| இந்திய குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701. |
| ஆசிரியர் பெயர் | : | **S. ராஜநாயகம்** |
| இந்தியக் குடிமகளா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701. |
| இதழுக்குரியவர் பெயரும், முகவரியும் | : | **கிறிஸ்துவின் சபை,**<br>தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701. |
| இந்தியக் குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701. |

S. ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

காங்கயம்
மார்ச், 1995

(ஒப்பம்)
S. ராஜநாயகம்

# யெகோவா சாட்சி (2)

## முறைப்படி வேதத்தை கற்காத கூட்டம்

ரஷ்யா கம்யூனிஸ்ட் நாடாக இருந்த காலத்தில், அந்நாட்டிற்கு யாராகிலும் சுற்றுலா சென்றால், தாங்கள் கொடுக்கும் வழிகாட்டிகளை மட்டுமே பயணிகள் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்பது நிபந்தனை அந்த வழிகாட்டிகள் சில இரகசிய இடங்களை பயணிகளுக்கு காட்டமாட்டார்கள். இப்படியாகத்தான் வேதத்தினூடே நீங்கள் பயணம் செய்யும்போது, கம்யூனிஸ்ட்டு களைப் போலவே உண்மையை மறைத்து வைக்கும் யெகோவா சாட்சியினர் பல இருட்டடிப்புகளை வேதத்திற்கு புறம்பாக செய்கின்றனர். தாங்கள் கொடுக்கும் காவல் கோபுர புத்தகத்தை பின்பற்றும்படி மிக சிரத்தையோடு வழி காட்டுவர்.

ஒருவர் வேதத்தைக் கற்கும் போது, ஐந்து விதி முறைகளைப் பின்பற்றி ஏழு கேள்விகளுடன் வேத அறிவைப் பெற வேண்டும். கற்க வேண்டிய ஐந்து முறைகள்.

1. ஆராய்ச்சி முறை யோவான் 5:39 (Synthesis Method)
2. பகுத்துப் பார்த்து கற்றல் 2 தீமோ 2:15 (Analysis Method)
3. தலைப்புகளை எடுத்துக்கொண்டு கற்றல் (Topical Method)
4. ஒப்பிட்டு (பழைய, புதிய ஏற்பாடுகளைப்) படித்தல் மத் 13:52 (Typical Method)
5. இயன்றவரை ஒவ்வொரு புத்தகம் மற்றும் அதிகாரச் சுருக்கங்களை மனதில் பதியத்தக்க வகையில் கற்றல் (Chapter Summary)

மேற்குறித்த முறைகளை படிப்படியாக கற்கும்போது, கேட்கவேண்டிய ஏழு கேள்விகள்.

(1) யார் பேசுவது? (2) யாரிடத்தில் பேசப்பட்டது? (3) நேரடியாகவா? (4) மறைமுகமாகவா? (5) உவமையாகவா? (6) பேசப்பட்ட சூழ்நிலை என்ன? (7) இதில் எனக்குள்ள பாடம் என்ன? மேற்குறித்த இவைகளில் ஒன்றையும் பின்பற்றி வேதத்தைக் கற்காதவர்கள் இந்த யெகோவா சாட்சியினர். இப்படிப் பட்டவர்களைப் பார்த்துதான் '...கல்லாதவர்களும், உறுதியில்லாத வர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்கு கேடு வரத் தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்' என்று பேதுரு அழகாகக் குறிப்பிட்டார் போலும்! (2 பேதுரு 3:16)

யெகோவா சாட்சியினரின் காவல் கோபுர பின்னணி : 1852 பிப்ரவரி மாதம் 16-ம் நாள் பிறந்த சார்லஸ் டாஸ் ரஸ்ஸல் என்பவர் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவர்.1872-ல் ரஸ்ஸல் ஒரு தீவிரவாதியாகி உடைந்த கிறிஸ்தவத்திலே நாட்டம் காட்டினார். இதன் பயனாக ஏழாம் நாள் ஆசரிப்பு சபையாரின் ஸ்தாபகர் எலன் ஜி ஒயிட் எழுதிய புத்தகத்திலே ஆர்வம் காட்டினார். அப்புத்தகத்தி லிருந்த **"நரகம் என்று ஒரு தனியிடமில்லை, கல்லறையோடே மனிதனின் ஆத்துமா முடிவடைவதையே நரகத்திற்கு ஒப்பிடப்படுகிறது'** என்ற கருத்து இவரை அதிகமாய் கவர்ந்தது. உடனே இக்கருத்து வேத எழுத்துக்களோடு ஏற்புடையதுதானா என்று கொஞ்சம் கூட ஆராய்ந்து பாராமல், தான் கற்றதோடு அநேக நூதன கருத்துக்களை புகுத்தி 'வேத வகுப்புகள்' என்ற பெயரிலே தனது கள்ள உபதேசத்தை வெளியிட ஆரம்பித்தார். ஒரு வசனப் பகுதியின் முன்னும் பின்னும் கூறப்படுவது என்ன என்பதைக் காணவில்லை. மாறாக தனது கருத்துக்கு ஏற்ப வசனங்களை தொகுத்துக்கொள்ள முற்பட்டார். விளைவு? இவர்களது உபதேசம் பல தடவை மாறுதல் பெற்றது.

வாசகரே, சத்தியம் ஒருபோதும் மாறுவதில்லை என்பதை நீங்கள் அறிய வேண்டும். சத்தியம் என்பது நேற்று வரையில் மட்டும் உண்மையாக இருந்ததில்லை அது இன்றும் உண்மைதான். நாளையும் உண்மைதான், என்றும் உண்மைதான். சத்தியம் மாறாதது. யெகோவா சாட்சியினரின் உபதேசம் சத்தியத்தைச் சார்ந்ததாக இருக்குமானால் அது காலத்தினூடே அடிக்கடி மாற்றம் பெற்று வருவதேன்? (கிறிஸ்துவின் வருகையைக் குறித்து இவர்களின் உபதேசம்' என்ற தலைப்பின் கீழ் இவர்களின் குளறுபடிகள் வரும் காலத்தில் வெளியாகும்.)

யெகோவா சாட்சியினர், தங்கள் காவல் கோபுரத்திலிருந்து வெளியிடப்பட்ட பரிசுத்த வேத எழுத்துக்களின் உலக புதிய மொழி பெயர்ப்பு' (The New World Translation of the Holy Scriptures) என்ற தலைப்பில் கலப்படமான உபதேசத்தை புகுத்தியுள்ளனர் ஒட்டுமொத்த கண்ணோக்கில் அது ஒரு நல்ல மொழியாக்கமாக இருந்தாலும், தங்கள் சொந்த உபதேசங்களையும் அதற்குள் புகுத்தியிருப்பது வேதனைக்குரியது. இப்படி இந்த மொழியாக்கத்தைச் செய்த அந்த நிபுணர்கள் யார் என அறிய ஒரு உண்மை ஊழியர் புரூக்ளின் நகரத்திலுள்ள காவல் கோபுரத்திற்கு கடிதம் எழுதிக் கேட்டார். அவர்கள் பதில் கூட எழுதவில்லை. இன்று சாதாரண உலக கல்வியில் நிபுணர்களாக காணும் நூற்றுக்கணக் கானபேர் இவர்கள் மொழிப்பெயர்ப்பைப் போலவே வேதாகம மொழி பெயர்ப்பில் இறங்கினார்களேயாகில், இவர்களைக் காட்டிலும் மிகத் துல்லியமாக உண்மையான சத்தியத்தை வெளியிட

முடியும் அவர்கள், இவர்கள் பல இடங்களில் கலப்படம் செய்திருப்பதை வெளிச்சத்தில் கொண்டு வர முடியும்.

இவர்கள் சத்தியத்தை முறையாக கற்றவராகில் வேதாகமத்தை கற்கும் படி ஜனங்களை ஊக்குவிப்பதை விட்டு விட்டு, ஏன் காவல் கோபுர வெளியீட்டை படிக்கும்படி தூண்டி விடுகின்றனர்? அவர்களின் கூற்று. 'ஒருவன் காவல் கோபுர வெளியீட்டு புத்தகத்தை படிக்காவிட்டால் அவனது வேத அறிவு இருண்டு விடும்.' என்பதாகும் குருட்டுத்தனமாய் யெகோவா சாட்சியினரை பின்பற்றும் ஜனக்கூட்டமே, சற்று நிதானியுங்கள். ஒருவன் வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் குறித்து உண்மையை அறிய விரும்பினால், எல்லாரையும் சோதித்தறிந்தல்லவா ஒரு உண்மையை கண்டறிய முடியும்?

எனது மற்றொரு கேள்வி. 1852-ல் சார்லஸ் டாஸ் ரஸ்ஸல் இவ்வியக்கத்தைத் தோற்றுவிக்கும் வரை, எந்த புத்தகம் ஜனங்களை வழிநடத்தியது? காவல் கோபுரத்தார் தங்கள் வெளியீடுகளை விற்று பணத்தை குவிக்க தொடங்கும்வரை கர்த்தருடைய ஜனங்களை வழி நடத்திய புத்தகம் எது? அல்லது, இவ்வளவு காலங்களும் (1852 வரை) யெகோவா தமது ஜனங்களை அந்தரத்திலே (இருளிலே) ஒரு சூனியத்திலேய விட்டுவிட்டாரா? சார்லஸ் ரஸ்ஸல் என்பவரின் கூட்டத்திலிருந்து தங்களை பிரித்துக் கொண்டு 'யெகோவா சீர்திருத்த சபை' என்றும், 'உண்மை கிறிஸ்தவ சபை' என்றும் பெயர் சூட்டித் திரியும் சிலர் தங்கள் அறிவை காவல் கோபுர புத்தகத்தில் வளர்த்துக் கொண்டவர்களேயல்லாமல், முறைப்படி வேத அறிவை பெற்றவர்கள் அல்லவே. இப்படி வேத அறிவு இல்லாத கூட்டத்திலா உங்கள் பங்கு? சிந்தியுங்கள். 'என்னைத் தள்ளி, என் வார்த்தகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்று இருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்.' என்றார் இயேசு கிறிஸ்து' (யோவா. 12:48) யெகோவா சாட்சியே, நியாயத் தீர்ப்பைச் சந்திக்கத் தயாரா?

(தொடரும்)

**Bro. EA. ஆறுமுகம்,**
**திண்டுக்கல்.**

## பாவம்

**பாவம் நம்மை அழித்து விடப் போவதில்லை, ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே பாவம் நம்மைத் தொடர்ந்து கொண்டுதானே இருக்கிறது?**

**பாவத்தை நாம் பாவம் என்று எண்ணாத போது தான் ஆபத்து ஆரம்பிக்கிறது. தேவனுடைய பொறுமைக்கு விடப்படும் சவலாகும் அது.**

# ஒரு தூய்மையான புதிய தொடக்கம்

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதற்கு நிக்கொதேமு : "ஒரு மனிதன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ" என்றான். இயேசு பிரதியுத்தரமாக "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 3:3-5) என்றார்.

இப்படியாக, புதிய பிறப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி நிக்கொதேமுக்கு இயேசு உபதேசித்தார். அதனுடைய அவசியத்தை இன்றும் நாம் தொடர்ந்து தைரியமாக பறை சாற்றி வருகிறோம். ஆனால் அதற்காக நாம் செய்ய வேண்டியதென்ன என்பதை உண்மையிலேயே புரிந்து கொண்டிருக்கிறோமா? புதிய பிறப்பைப் பற்றி பவுல் உபதேசித்தார் : "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17) பவுலுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! அவர் பாவிகளில் பிரதான பாவியாக சபையின் பெரிய எதிரியாக இருந்தார். (1 தீமோ. 1:15) ஆனால், சபையின் மாபெரும் பாதுகாவலனாக அவர் மாறிவிட்டார். இது எவ்வாறு நடந்தது? அவர் புதிப்பிக்கப்பட்டார் - ஒரு புதிய தொடக்கம் அவருக்கு அளிக்கப்பட்டது.

அப்படிப்பட்ட ஒரு தூய, புதிய ஆரம்பத்தை அடைவது - ஒரு தூய்மையான சாதனையோடு மீண்டும் புது வாழ்வை தொடங்குவது பெரிய காரியமாக இருக்கும் அல்லவா? நான் கிறிஸ்தவனாக மாறும் போது, இதே காரியந்தான் நடைபெறுகிறது. பழைய வாழ்க்கை மறைந்து போகிறது, புதிய வாழ்க்கை தொடங்குகிறது. இப்போது நான் ஒரு புதிய திசையை நோக்கி, ஒரு புதிய காரணத்தோடு செல்லுகிறேன். எனக்கு ஒரு புதிய குரு இப்போது இருக்கிறார். கடந்த கால தவறான எண்ணங்களும் நடவடிக்கைகளும் என்னை நெருங்குவதில்லை. நான் தூய்மையான ஒரு புதுப்பிறவி.

எனது கடந்தகால பாவங்களுக்காக நான் மனஸ்தாப்படும்போது, அவைகளிலிருந்தும், எனது பழைய வாழ்க்கை முறையிலிருந்தும் நான் மாறுகிறேன். நான் தேவனிடத்தில் இரும்புகிறேன். அவரைப் பிரியப்படுத்தும் வழியில் வாழ இப்போது நான் தீர்மானித்திருக்கிறேன். என் பழைய வாழ்க்கையிலிருந்து நான்

விடுபட வேண்டும், அல்லது மரிக்க வேண்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6:3-5) இவ்வாறாக ரோமபுரிச் சபைக்கு பவுல் எழுதுகிறார். பாவ வாழ்க்கைக்கு நாம் மரித்து, தேவனுக்காக வாழ நாம் மீண்டும் பிறக்கிறோம்.

ஒரு புதுப் பிறவியாக, என்னுடைய நடவடிக்கைகளை மாற்றும் பொருட்டு, நான் என்னுடைய எண்ணங்களை மாற்ற வேண்டும், பவுல் நமக்கு நினைவு கூறுகிறார் : "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்." (கொலோ 3:1-2) பல பாவக்குணங்களை நமது வாழ்விலிருந்து அகற்றிவிட்டு, பல நற்குணங்களை நமது வாழ்வில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று, தொடர்ந்து பவுல் நமக்குக் கூறுகிறார். (3:5-17)

ஒரு புதிய குடும்பத்தில், ஒரு புதுப் பிறவியாக பிறந்துள்ள எனக்கு, இப்போது ஒரு புதிய பெயர் உண்டு. எனக்குக் கிடைக்கக் கூடிய எல்லா பெயர்களிலும் இந்தப் புதிய பெயர் மேலானது. இப்படிப்பட்ட சிறப்பான புதிய பெயரைத் தமது மக்களுக்குத் தருவதாக தேவன் வாக்களித்தார். (ஏசாயா 62:2) இப்போது அந்தப் பெயர் எனக்குக் கிடைத்துள்ளது! நான் தேவனுடையவன், அவருடைய பெயரை நான் தரித்துக் கொண்டிருக்கிறேன். "கிறிஸ்தவன்" என்பதே அப்பெயர். (அப் 11:26; 1 பேதுரு 4:16) நாம், "தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறோம். முன்னே (நீங்கள்) நாம் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறோம்" (1 பேதுரு 2:9-10)

உங்களுக்கு ஒரு பணக்கார உறவினர் இருந்து, அவர் மரித்துப் போய் அவருடைய சகல சொத்துக்களையும் உங்களுக்கு விட்டுச் சென்றாரென்றால் எப்படியிருக்கும் என நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? தேவனுடைய பிள்ளையாகிய நான், அவருடைய வாரிசாகவும், இயேசுவின் ஒரு கூட்டு வாரிசாகவும் இருக்கிறேன்.

(ரோமர் 8:16-17) அது எவ்வளவு மதிப்புமிக்கது? வாழ்க்கையில் நான் வேறு எதை அதிகமாக விரும்ப முடியும்? இந்த வாழ்க்கையில் சிறந்தவற்றை தேவன் நமக்கு அளித்திருக்கிறார். அதோடு அவருடன் நித்தியத்திற்கும் நாம் வாழவும் வாக்களித்திருக்கிறார்.

மீண்டும் பிறப்பது - ஒரு தூய புதிய வாழ்வின் தொடக்கம்; எப்படிப்பட்ட ஆசீர்வாதம்! இப்போது நாம் தேவனை நமது தந்தை என்றும், இயேசுவை நமது சகோதரன் என்றும் அழைக்கிறோம். அவர்கள் நம் ஒவ்வொருவருக்கும் பெரிதான ஒன்றை ஒதுக்கி வைத்துள்ளனர். ஒரு பரிசுத்தமான புதிய ஆரம்பம் உங்களுக்குத் தேவையா? தேவனுடைய குடும்பத்தில் ஒரு உறுப்பினராக இருக்க விரும்புகிறீர்களா? இன்றே நீங்கள் அதற்காக முயற்சி செய்து, தேவனுடைய குடும்பத்தில் பிறந்தால் என்ன? அவ்வாறு செய்ய, முதலில் நீங்கள் விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16:16); பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். (லூக்கா 13:1-5); இயேசுவை தேவனுடைய குமாரன் என்று உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். (ரோமர்10:9-10); பின்னர், பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டும். (அப்.2:38) அதன் பின் நீங்களும் ஒரு புதுப் பிறவியாக - தேவனுடைய ஒரு பிள்ளையாக, தினமும் அவருக்கு ஊழியஞ் செய்யும் வலுவை பெற்றவராக நீங்களும் மாறுகிறீர்கள்.

**Ronnie Lowe** **ரோன்னி லோவ்.**

## கைப்பிரதிகள் வேண்டுவோர்

## கவனத்திற்கு

**ரூ. 2.00-க்கான தபால் தலை உடனே அனுப்பி, ஒருசெட் கைப்பிரதிகளை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோ. S.S. ராஜன்**
**கொசவபட்டி**
**சானார்பட்டி (வழி) - 624 304**
**திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, March, 1995
MARCH 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,

காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER

BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701